ரம்பேவ பிரதேச சபை - 2023

---------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ரம்பேவ பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று/ தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் ரம்பேவ பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு

அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |

### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மிகை அல்லது பற்றாக்குறையில் அடையாளப்படுத்தப்பட்ட மூலதன மாற்றல் செலவினம் ரூபா.796,196 முற்றடங்கல் வருமான கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்ளப்படுகிறது. | மூலதன மாற்றல் செலவினம் முற்றடங்கல் வருமான கூற்றில் உள்ளடக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2023 ஆம் ஆண்டில் மூலதன மாற்றலாக கிடைக்கப்பெற்ற ரூபா.6,598,000 பெறுமதியான 02 உழவு இயந்திரங்கள் முற்றடங்கல் வருமான கூற்றில மூலதன மாற்றலாகவும், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களாகவும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | மூலதன சொத்துக்களின் பெறுவனவு ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களாக அடையாளம் காணப்பட வேண்டும். |
| (இ) | 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் பெறப்பட்ட வேண்டிய குறைந்தபட்ச முத்திரை வரி வருமானம் ரூபா.1,375,700 ஆக காணப்பட வேண்டும் இருப்பினும் அது ரூபா.250,000 ஆக குறைத்து கணக்கிடப்பட்டிருந்தது இதன் விளைவாக நிலுவை முத்திரை வரி வருமானம் அவ் பொறுமதியினால் குறைந்திருந்தது. | ஏற்றுக்கொள்ளப்படுகிறது. | சரியான பெறுமதி கணக்கிடப்பட வேண்டும். |
| | உள்ளுராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 3.7 இன் பிரகாரம் ஒவ்வெரு நிறுவனத்தினதும் பாதீட்டு ஆவணங்களில் உள்ள பாதீடு செய்யப்பட்ட தகவல்கள் அந்த காலப்பகுதிக்கான நிதிக் கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் பிரதேச சபையின் காசுப்பாச்சல் கூற்று பாதீடு செய்யப்பட்ட தகவல்கள் இன்றி சமர்ப்பிக்கப்பட்டது. | ஏற்றுக்கொள்ளப்படுகிறது. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள் பின்பற்றப்பட வேண்டும். |

### 1.6.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பரீட்சை மீதி படி தளபாடங்களின் பெறுமதி ரூபா.1,581,066 ஆக காணப்பட்டது இருப்பினும் பேரேட்டு கணக்கு மற்றும் குறிப்பு இலக்கம் 16 இன் பிரகாரம் ரூபா.1,287,835 ஆக காணப்பட்டது எனவே வேறுபாடு ரூபா.293,231 அவதானிக்கப்பட்டது. | ஏற்றுக்கொள்ளப்படுகிறது. | வேறுபாட்டிற்கான காரணங்களை கண்டறிந்து சீராக்கம் செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | பேரேட்டு கணக்குகளின் படி 2023 சனவரி 01 இல் நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரை வரி ரூபா.2,511,862 ஆகும். இருப்பினும் பட்டியல்களின் படி அது ரூபா.705,633 ஆக காணப்பட்டது. எனவே வேறுபாடு ரூபா.1,806,229 அவதானிக்கப்பட்டது. | -மேற்படி- | -மேற்படி- |

### 1.6.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

| | விடயம் | பெறுமதி ரூபா. | சமர்பிக்கப்படாத கணக்காய்வு சான்றுகள் | சபையின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | தற்காலிக ஓய்வூதியம் | 57,927 | விரிவான பட்டியல், வயது பகுப்பாய்வு மற்றும் உறுதிப்படுத்தல்கள். | தகவல்கள் காணப் படமையினால் இதனை முடிவுறுத்த முடியவில்லை. | எழுத்து மூலமான ஒப்பாய்வு ஆவணம் சமர்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நானாவிதமானவை | 287,369 | -மேற்படி- | -மேற்படி- | -மேற்படி- |
| (இ) | ஒப்பந்த முற்பணம் | 20,000 | -மேற்படி- | -மேற்படி- | -மேற்படி- |
| (ஈ) | ஒப்பந்தகாரகள் முறிகள் | 63,080 | -மேற்படி- | -மேற்படி- | -மேற்படி- |
| (உ) | ஏனைய பிணை வைப்புக்கள் | 7,465 | -மேற்படி- | -மேற்படி- | -மேற்படி- |
| (ஊ) | ஏனைய வைப்புக்கள் | 1,693 | -மேற்படி- | -மேற்படி- | -மேற்படி- |
| (எ) | நீதிமன்ற வைப்புக்கள் | 9,486 | -மேற்படி- | -மேற்படி- | -மேற்படி- |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 10,685,007 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 15,326,002 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலங்கள் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்படட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| (i) | வீதவரியும் வரியும் | 2,471,502 | 1,881,326 | 2,204,794 | 3,098,448 | 2,267,502 | 2,564,612 | 1,566,997 | 3,421,916 |
| (ii) | வாடகை | 15,561,000 | 8,043,815 | 8,172,475 | 5,785,490 | 11,780,000 | 4,877,120 | 4,257,224 | 5,914,150 |
| (iii) | அனுமதிப்பத் திரக் கட்டணங்கள் | 2,038,620 | 1,104,910 | 755,650 | 1,455,260 | 1,788,620 | 1,464,010 | 1,098,880 | 1,106,000 |
| (iv) | ஏனைய வருமானம் | 8,150,802 | 7,963,248 | 7,707,012 | 2,791,324 | 7,540,080 | 2,162,575 | 4,996,473 | 2,535,088 |
| | மொத்தம் | 28,221,924 | 18,993,299 | 18,839,931 | 13,130,522 | 23,376,202 | 11,068,317 | 11,919,574 | 12,977,154 |

#### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புகள் கீழ் வருமாறு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) வீதவரியும் வரியும்** | | |
| மீளாய்வாண்டின் சனவரி 01 உள்ளவாறான நிலுவையாகவுள்ள வீதவரியும் வரியும் ரூபா. 1,368,047 | நிலுவையாகவுள்ள வீதவரியினையும் வரியினையும் எதிர்காலத்தில் சேகரிக்கரிப்பதற்கு | நடப்பு ஆண்டின் மற்றும் நிலுவை வீதவரியினையும் வரியினையும் அறவிடுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆகும், இவற்றுள் 61 சதவீத வரியான ரூபா.834,509 மற்றும் 43 சதவீத மீளாய்வாண்டிற்கான வீதவரியும் வரியும் ரூபா. 264,351 ஆகியன சேகரிக்கப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | |
| **(ஆ)** | **வாடகை** | | |
| (i) | சபைக்கு செந்தமான 19 கடைகளுக்கான மீளாய்வாண்டிற்கான வாடகை ரூபா.1,987,010 இவற்றுள் 32 சதவீதமான ரூபா.643,960 அறவிடப்பட்டிருக்கவில்லை. | கடை இலக்கம் 01,03 மற்றும் 04 இற்கு 2023 ஆண்டிற்கான இற்கான ஒப்பந்தம் மேற்கொள்ளப் படாமையினால் அதனை அறவீடு செய்வதற்கு சாத்தியப்படவில்லை. | ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு அதனை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ii) | 2023 சனவரி 01 இல் உள்ளவாறான செத்துக்களினை குத்தகைக்கு விடப்பட்டமையினால் கிடைக்கப்பெற வேண்டிய வாடகை நிலுவைகள் ரூபா.2,774,005 2023 வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | தெடர்புடைய தரப்பினருக்கு நிலுவையினை அறவிடுவதற்கான கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. | வாடகை நிலுவைகளை அறவிடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (iii) | 2019 தொடக்கம் 03 வாகனங்கள் தொடர்பாக பெறவேண்டிய வாடகை ரூபா.2,060,525 2023 வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | இந்த வாடகையினை யாரிடமிருந்து அறவிடவேண்டியுள்ளது தொடர்பாக அடையாளம் காணமுடியவில்லை, விசாரணை மேற்கொள்ளப்பட்டிருந்தும் அறிக்கை இதுவரை கிடைக்கப்பெறவில்லை. | விசாரணை அறிக்கை பெறப்பட்டு அறவீடு மேற்கொள்ளப்பட வேண்டும். |
| **(ஆ)** | **அனுமதிப்பத்திரக் கட்டணம்** | | |
| (i) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய நிலுவை அனுமதிப்பத்திரக் கட்டணம் ரூபா.352,750 அறவிடப்பட்டிருக்கவில்லை. | அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. | நிலுவை அனுமதிப்பத்திரக் கட்டணத்தினை அறவிடுவதற்கு நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | | | மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ii) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய நிலுவை விளம்பரப்பலகை கட்டணம் ரூபா.317,510 அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவைகளின் ஒருபகுதி பெறப்பட்டுள்ளது மிகுதி நிலுவையினை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. | நிலுவையாகவுள்ள விளம்பரப்பலகை கட்டணத்தினை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| **(இ)** | **நீதிமன்ற தண்டப்பணமும் முத்திரைக் கட்டணமும்** | | |
| | 2023 டிசம்பர் 31 இல் மாகாணசபையின் பிரதம செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தான நிலுவை நீதிமன்ற தண்டப்பணம் ரூபா. 2,411,916 மற்றும் முத்திரை கட்டணம் ரூபா.250,000 அறவிடப்பட்டிருக்கவில்லை. | அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது | அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் குறித்துரைக்கப்பட்டுள்ள செயற்பாடுகளின் செயற்றிறன்

பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவு என்பவற்றின் கீழ் பொது சுகாதாரம், பொதுப்பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகள், நலன்புரி என்பனவாக சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| பிரதேச சபைச் சட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் காணப்படுகின்ற 30 முக்கிய விடயங்களை நிறைவேற்றுவதற்கான உப விதிகள் உருவாக்கப்பட்டிருக்க வேண்டும். இருப்பினும் 2023 திசெம்பர் 31 வரை அவ்விதமான உப விதிகள் உருவாக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்ளப்பட்டது. | உப விதிகளை உருவாக்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 3.2 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 செப்தம்பர் தொடக்கம் ஒக்டோபர் வரையான 02 மாத காலப்பகுதியில் நாளாந்தம் சிறாப்பரிடம் கிடைக்கபெற்ற ரூபா.349,515 இனை சபை நிதியில் வரவு வைக்காமையினால் சிறாப்பர் பதவியில் பணியாற்றிய அலுவலகர் ஒருவர் வேலை இடைநிறுத்தப்பட்டிருந்தார். இருப்பினும் இழப்பிற்கு பொறுப்பானவரிடமிருந்து இழப்பிணை பெற்றுக்கொள்வதற்கும் மற்றும் பிரதேச சபை விதியின் 13,14 மற்றும் 15 பின்பற்றப்பட்டிருக்கவில்லை. | இவ்விடயம் தொடர்பாக தற்போது விசாரணை இடம் பெறுகின்றது அறிக்கை கிடைக்கப்பெற்றதும், 13,14 மற்றும் 15 ஆம் விதிகளுக்கு அமைவாக நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. | விசாரணை அறிக்கை பின்பற்றப்பட வேண்டும். |

## 3.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வலவஹங்குன் குளத்தில் அமைக்கப்பட்ட RO நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் ஊடாக வழங்கப்படுகின்ற குடி நீர் தொடர்பான நீர் கட்டணம் வருமானமாக பெறப்பட்டிருக்கவில்லை. | வலவஹங்குன் குளத்தில் காணப்படுகின்ற RO நீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து வருமானத்தினை பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. | பருசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு நிதி அறவீடு மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | ரம்பேவ வாராந்த சந்தை தொடர்பாக முறையான ஆய்வு மேற்கொள்ளாமையினாலும், வருமான சேகரிப்பு முறையாக கண்கானிக்கப்படாமையினாலும் சபைக்கான உண்மையான வருமானம் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. | வாராந்த சந்தை தொடர்பாக முறையாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டு குறிப்பிட்டப்பட்ட கட்டணம் தீர்மானிக்கப்பட்டு அவற்றினை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. | முறையாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டு கட்டணம் அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | ரம்பேவ வாராந்த சந்தைத் தொகுதியில் மிக உயரத்தில் கட்டப்பட்டிருந்து மீன் விற்பனை கடை தொதிகள் பயன்பாடற்ற நிலையில் காணப்படுகின்றது. | வாராந்த சந்தைத் தொகுதி நவீனமயமாக்கலின்போது இவ்விடயம சீர்செய்யப்படும். | தேவையான திருத்தங்கள் துரிதப்படுத்தப்பட வேண்டும். |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரம்பேவ வாராந்த சந்தைத் தொகுதி வளாகத்தின் பாதுகாப்பிற்கான சுற்று வேலிகள் மற்றும் கழிவறை முறைமையின் உபகரணங்கள் ஆகியன காளவாடப்பட்டுள்ளதுடன், வாராந்த சந்தைத் தொகுதி வளாகம் போதைப்பொருள் விற்பனை மற்றும் ஏனைய சட்டவிரோத செயற்பாடுகளுக்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றது. | வாராந்த சந்தைத் தொகுதி நவீனமயமாக்கலின்போது இவ்விடயம சீர்செய்யப்படும். | தேவையான திருத்தங்கள் துரிதப்படுத்தப்பட வேண்டும். |

## 4 கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்

### 4.1 வருடாந்த செயற்திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வரவு செலவுத்திட்த்திற்கு அமைவாக சபையினால் மேற்கொள்ளவுள்ள செயற்பாடுகள் தொடர்பாக வருடாந்த செயற்திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. . | வரவு செலவுத்திட்த்ததுடன் இணைந்த வகையில் வருடாந்த செயற்திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |

### 4.2 சுற்றாடல் பிரச்சினை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2015 ஆரம்பிக்கப்பட்ட சண்டமல்கம கழிவு முகாமைத்துவ நிலையத்திற்கு சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான நடவடிக்கை 2023 வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. | சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான ஒப்பந்தம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். |